BRAMPTON

Community Services
Recreation

**உங்களுக்கான பொழுதுபோக்கு கணக்கைச் சரிபாருங்கள். உங்களுக்கான குடியிருப்பு பலன்களைத் தக்கவையுங்கள்**

மே 1 ஆம் தேதி முதல் 2025 அக்டோபர் மாதம் வரை, வாடிக்கையாளர் கணக்குத் தகவல்கள் புதுப்பித்த நிலையில் இருப்பதையும், தகுதியுள்ள குடியிருப்பாளர்கள் மட்டுமே குடியிருப்பு கட்டண விகிதங்களுக்கான பலன் மற்றும் முன்னுரிமைப் பதிவுக்கான கால அவகாசத்தின் பலனடைவதையும் உறுதி செய்வதற்காக, பிராம்ப்டன் பொழுதுபோக்கு அமைப்பானது குடியிருப்பு சரிபார்ப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. அனைத்து பிராம்ப்டன் பொழுதுபோக்கு மையங்களிலும் குடியிருப்பு சரிபார்ப்பு செய்யப்படுகிறது.

**ஏன் சரிபார்ப்பு செய்யவேண்டும்?**

• பதிவு செய்யப்பட்ட மற்றும் ட்ராப்-இன் திட்டங்களுக்காக, உறுப்பினராகும்தன்மை மற்றும் வசதிகளை முன்பதிவு செய்தலுக்காக **குடியிருப்பு விகிதங்களைப்** பேண வேண்டும்

• ட்ராப்-இன் செயல்பாடுகளுக்கு குடியிருப்புவாசிகள் 25 மணி நேரம் முன்னதாகவும் குடியிருப்புவாசி அல்லாதவர்கள் 1 மணி நேரம் முன்னதாக பதிவு செய்யவும்.

**உங்கள் குடியிருப்பை சரிபார்ப்பு செய்வது எப்படி**

1. **பிராம்டன் பொழுதுபோக்கு மையம் ஒன்றுக்கு** வருகை தரவும்

2. உங்கள் கணக்குத் தகவல்களை செல்லத்தக்கதா என சரிபார்க்கவும், ஏற்கத்தக்க அடையாளம் மற்றும் முகவரி படிவத்தைக் கொண்டு வரவும்

3. உங்கள் கணக்கைப் புதுப்பிக்க உங்கள் அடையாளப் படிவத்தை அங்குள்ள **வாடிக்கையாளர் சேவை சாளரத்தில்** சமர்ப்பிக்கவும்

**அடையாளத்திற்கான நிரூபணம்:**

• ஓட்டுனர் உரிமம் அல்லது ஒன்ட்டாரியோ புகைப்பட அடையாள அட்டை

• கடவுச்சீட்டு

• நிரந்தரக் குடியிருப்பு அட்டை

• பிராந்திய சுகாதார அட்டை (சிகப்பு/வெள்ளை அட்டைகள் ஏற்பதற்கில்லை)

• கனடா நாட்டு பிறப்புச் சான்றிதழ் (செல்லத்தக்க புகைப்பட அடையாளத்துடன் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே)

**பிராம்டன் முகவரிக்கான நிரூபணம்:**

• ஓட்டுனர் உரிமம் அல்லது ஒன்ட்டாரியோ புகைப்பட அடையாள அட்டை

• பல்லுபயோக (தொலைபேசி, டிவி, தண்ணீர், சமையல் வாயு) விலைப்பட்டியல்

• வங்கி அல்லது கிரெடிட் கார்டு பட்டியல்

• அரசாங்கப் பலன்களுக்கான அறிக்கை

• சொத்துவரி ரசீது

• கனடா நாட்டு வருவாய்த்துறை மதிப்பீட்டு அறிக்கை

**உதவி தேவையா?**

விபரங்கள் பெற, visit brampton.ca/recreation க்கு வருகை புரியவும் அல்லது பொழுதுபோக்கு மையத்தில் இருக்கும் அலுவலருடன் பேசவும்